தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# அனைத்துலகத் தேர்வு
# 2011
# தமிழ்மொழி

## ஆண்டு 9

சுட்டெண்:

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## 1) தேர்விடை வினா - விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. தமிழ் மொழியின் செம்மைகருதி அதற்கு இடப்பட்ட பெயர்.

அ) தேன்தமிழ் ஆ) செந்தமிழ்
இ) பைந்தமிழ் ஈ) அழகுதமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. ஆட்டத்துமங்கையர் போல் காட்சி அளித்தது

அ) நெல் ஆ) குரக்கன் இ) சாமை ஈ) சோளம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. வெள்ளி ஒளி வீசும் திக்கு

அ) கிழக்கு ஆ) மேற்கு இ) தெற்கு ஈ) வடக்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. பின்வருவனவற்றுள் அடுக்குத்தொடர்

அ) படபட ஆ) தன்னந்தனியே இ) விடியவிடிய ஈ) அல்லும்பகலும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. இலங்கையில் நாகதீபம் என்று அழைக்கப்பட்ட பகுதி

அ) வடபகுதி ஆ) தென்கிழக்குப்பகுதி
இ) தெற்குப்பகுதி ஈ) நடுப்பகுதி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. முன்னாளில் இறந்தோரை இதில் வைத்து அடக்கம் செய்வர்

அ) பெட்டி ஆ) ஈமத்தாழி இ) கல்லறை ஈ) நிலவறை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. மகாவம்சம் என்ற நூல் எழுதப்பட்ட மொழி

அ) உருது ஆ) எலு இ) பாளி ஈ) சிங்களம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. வாழைக்குருத்து இது எத்தகைய புணர்ச்சி

அ) இயல்புப் புணர்ச்சி ஆ) திரிதற்புணர்ச்சி

இ) கெடுதற்புணர்ச்சி ஈ) தோன்றற்புணர்ச்சி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. களிறு என்ற சொல்லின் பொருள்

அ) ஆண்யானை ஆ) ஆண்புலி இ) ஆண்சிங்கம் ஈ) ஆண்குதிரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. தாயின் தாலாட்டு என்ற பாடலைப் பாடியவர்

அ) உருத்திரமூர்த்தி ஆ) பொன்முடியார் இ) பாவேந்தர் ஈ) கம்பர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. தமிழ் மறை விருந்து என்ற நூலை எழுதியவர்

அ) தனிநாயகம் அடிகள் ஆ) தாவீது அடிகள்
இ) விபுலாநந்த அடிகள் ஈ) விவேகானந்த அடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. பெயர்ச் சொற்களின் வகைகள்

அ) ஐந்து ஆ) ஏழு இ) ஆறு ஈ) நான்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. சக்திமுற்றப் புலவர் தூதாக அனுப்பிய பறவை

அ) கொக்கு ஆ) நாரை இ) மயில் ஈ) புறா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. காக்கை வன்னியன் என்ற இரண்டகனால் காட்டிக் கொடுக்கப்பட்ட மன்னன்.

அ) சங்கிலியன் ஆ) எல்லாளன்
இ) கயிலைவன்னியன் ஈ) வீரபாண்டிய கட்டப்பொம்மன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. வட்டுடை என்பது

அ) சீருடை ஆ) போருடை இ) வட்டஉடை ஈ) பட்டுடை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. காலம் காட்டும் வினைச்சொல்

அ) குறிப்புவினை ஆ) எச்சவினை
இ) தெரிநிலைவினை ஈ) குறைவினை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. இலங்கையில் முதன்முதல் காலடி வைத்த போர்த்துக்கேயன்

அ) லோறன்சோ ஆ) டி.அல்மெய்டா
இ) சோல்பரி ஈ) றொபேர்ட்நொக்சு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. த், ட் என்பன

அ) எதிர்கால இடைநிலைகள் ஆ) நிகழ்கால இடைநிலைகள்
இ) இறந்தகால இடைநிலைகள் ஈ) வருங்கால இடைநிலைகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் ______________________
தெய்வத்துள் வைக்கப் படும்.

அ) வானுறையும் ஆ) மண்ணுறையும்
இ) நீருறையும் ஈ) நிலத்துறையும்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. உலக அறிவற்றவர்களைக் குறிக்கும் உவமைத்தொடர்

அ) இலவுகாத்த கிளிபோல ஆ) கிணற்றுத்தவளை போல
இ) ஊமைகண்ட கனவு போல ஈ) கலங்கரை விளக்குப் போல

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. 'மேழி பிடிக்கும் கை' எனக் கூறப்படுவது

அ) அரசனின்கை ஆ) வீரனின்கை

இ) குழந்தையின்கை ஈ) உழவரின்கை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. நிறைகுடம் தளம்பாது என்ற பழமொழி குறித்து நிற்கும் பொருள்

அ) குடத்தில் நீர் இருந்தால் தளம்பாது ஆ) அறிவின் அடக்கம்

இ) வீண் பெருமை ஈ) முன்னேற்பாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. காவலன் என்ற சொல்லைப் பிரித்தால்

அ) காவ + அன்　　ஆ) காவல் + ன்
இ) காவல் + லன்　　ஈ) காவல் + அன்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

24. தமிழர் என்ற சொல்லில் வந்துள்ள விகுதி

அ) அர்　　ஆ) ஆர்　　இ) னர்　　ஈ) ழர்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

25. இலங்கையில் மிகப்பெரிய தாழிக்காடு உள்ள இடம்

அ) கந்தரோடை　　ஆ) பொம்பரிப்பு　　இ) பூநகரி　　ஈ) ஆனைக்கோட்டை

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

26. தேன்மொழி என்ற உவமையணியில் தேன் என்பது

அ) உவமானம்　　ஆ) உவமேயம்　　இ) பொதுத்தன்மை　　ஈ) உருவகம்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

27. கை என்பது

அ) குணப்பெயர்　　ஆ) சினைப்பெயர்
இ) பொருட்பெயர்　　ஈ) தொழிற்பெயர்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

28. சொல்லின் முதலிலும் இறுதியிலும் வந்து வினாப்பொருளை உணர்த்தும் எழுத்து

அ) எ　　ஆ) ஏ　　இ) ஓ　　ஈ) யா

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

29. கோப்பை என்பது

அ) தமிழ்ச்சொல்　　ஆ) ஆங்கிலச்சொல்

இ) போர்த்துக்கேயச்சொல்　　ஈ) ஒல்லாந்துச்சொல்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

30. தடமார்பில் வேல்தாங்கி நடுகல்லாய் நிற்கும் பண்பு

அ) வீரம்　　ஆ) அச்சம்　　இ) வாய்மை　　ஈ) இரக்கம்

அ) ☐　ஆ) ☐　இ) ☐　ஈ) ☐

(புள்ளிகள் 30)

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

கற்றறிந்த நல்லோரோடு நட்புக் கொள்வதே சிறந்தது. அவர்களது நல்லறிவினால் அவரது உள்ளத்தில் அன்பு நிறைந்திருக்கும். அவ்வன்பினால் நாட்பட நாட்பட அவர்களது நட்பு மகிழ்வைத் தரும். அவர்களோடு பேசுவதும் பழகுவதும் நல்ல அறிவை வளர்க்கும். நமக்குத் துன்பம் வந்த காலத்திலே அத்தகையோர் விரைந்து உதவுவர். நமது துன்பத்தைத் தமது துன்பமாகக் கருதி வருந்துவர். அவர்களது நட்பினால் எமக்கு நல்லறிவு வளரும். அதனால், அவர்களது நட்பு கரும்பை நுனியிலிருந்து தின்பதுபோல் போகப்போக மேன்மேலும் இனிமை தரும். உள்ளத்திலே நல்லன்பு இல்லாதோருடைய நட்பு காலஞ் செல்லச்செல்ல அன்பு குறைந்துவிடும். அவர்களுடைய நட்பிலே நமக்கு இன்பம் விளையாது. அந்த நட்பு கரும்பை அடியிலிருந்து தின்பதுபோல் இனிமை குறைந்து செல்லும். இறுதியில் அது அன்புச் சுவைதரும் நட்பாக இல்லாது விரும்பத் தகாத நட்பாகிவிடும். இந்த நட்பின் வகையை கரும்பின் உவமை மூலம் நாலடியார் சிறப்பாக விளக்குகிறது.

இதனை நட்பாராய்தல் என்னும் அதிகாரத்திலும் வள்ளுவர், விளக்கி உள்ளார். நன்று தீது ஆராயாது கொள்ளும் நட்பானது இறுதி வரைக்கும் ஒருவனுக்குத் துன்பம் விளைவிக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். எனவே, நாம் நட்புக் கொள்ளும் போது நல்லவரோடு நட்புக் கொள்ளுதல் வேண்டும்.

1. ஆராய்ந்து நட்புக்கொள்ள வேண்டும் என்று கூறும் திருக்குறளின் அதிகாரம் எது?

______________________________________________

______________________________________________

2. எத்தகையோரின் நட்பு எமக்கு நல்லறிவைத் தரும்?

______________________________________________

______________________________________________

3. கரும்பை நட்புக்கு உவமையாகக் கூறியுள்ள அறநூல் எது?

______________________________________________

______________________________________________

4. யாருடைய நட்பு துன்பத்தைத் தரும்?

5. எவற்றை ஆராய்ந்து நாங்கள் நட்புக் கொள்ள வேண்டும்?

(புள்ளிகள் 10)

## 3) பாடநூல் வினா- ஏழில் ஐந்திற்கு விடை தருக.

1. பயிர் வாடிய போது பெய்யாத மழை பின்னர் என்ன செய்தது?

2. மகாவம்சம் தனக்குள் தானே முரண்படும் நிகழ்வுகள் இரண்டைத் தருக?

3. தனிநாயகம் அடிகளார் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள் இரண்டைத் தருக?

4. சக்திமுற்றப் புலவரின் பாடலை செவியுற்ற பாண்டியன் அவருக்கு எவ்வாறு உதவினான்?

5. போர்த்துக்கேயருக்கு எதிராக முதலாம் சங்கிலி மன்னன் மேற்கொண்ட செயல்கள் யாவை?

______________________________________________

______________________________________________

6. திருக்குறள் "உலகப் பொதுமறை" என்று போற்றப்படுவதற்கான கரணியம் யாது?

______________________________________________

______________________________________________

7. வீரத்தாய் தன் மகனை எவ்வாறு போருக்கு அனுப்பி வைத்தாள்?

______________________________________________

______________________________________________

(புள்ளிகள் 10)

## 4) பாடல் வினாக்களுக்கு முழுவிடை தருக.

***செந்தமிழ் மக்களே வாரீர் - எங்கள்***
***தெய்வத் தமிழ்மொழிச் சீரினைத் தேரீர்***
***அந்தமில் எம்மொழித் தாயாள் - படும்***
***அல்லலைத் தீர்க்க அறிவு வாராதா***

***இன்னமுதோ தெளி தேனோ - என***
***எம்செவிக்கு இனிக்கின்ற மொழியெது தானோ***
***ஆருயிர் மொழிதனை நாமே - வெறுத்து***
***அருவருத்து அவமதித்திடல் அழகாமோ***

***இயலிசை நாடகம் கொண்ட எம்மொழியை***
***என்றுமே கற்று இனிதாக வாழ்வோம்.***
***இணையில்லா அறிஞரும் மறவரும் போற்றிடும்***
***இனிய எம் மொழியை என்றுமே கற்றிடுவோம்.***

1. இப்பாடலில் இடம் பெறும் தமிழின் முப்பிரிவுகளும் எவை?

______________________________________________

______________________________________________

______________________________________________

2. எமது மொழியை யார் யார் போற்றுகின்றனர்?

______________________________________________

______________________________________________

______________________________________________

3. வாரீர் எனக் கவிஞர் யாரை அழைக்கின்றார்?

______________________________________________

______________________________________________

______________________________________________

4. அல்லலைத் தீர்ப்பது எது?

______________________________________________

______________________________________________

______________________________________________

5. இப்பாடலில் என்ன உணர்வு வெளிப்படுத்தப்படுகிறது?

______________________________________________

______________________________________________

(புள்ளிகள் 10)

## 5) அனைத்து இலக்கண/மொழியியல் வினாக்களுக்கும் விடை தருக.

1. பின்வரும் சொற்களைப் பகுதி விகுதி, இடைநிலை எனப் பகுத்து எழுதுக.

   உண்டான்: ______________________

   எழுதுகிறாள்: ______________________

   செல்வான்: ______________________

2. புணர்ச்சி எத்தனை வகைப்படும்? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

   ______________________

   ______________________

   ______________________

3. தரப்பட்டுள்ள சொற்றொடர்கள் இடம்பெறச் சொல்லியங்கள் எழுதுக.

   பென்னம்பெரிய: ______________________

   கண்ணுங்கருத்தும்: ______________________

   கதறிக்கதறி: ______________________

4. வல்லின மெல்லின இடையின மெய் எழுத்துகளை வகைப்படுத்தி எழுதுக.

   வல்லினம்: ______________________

   மெல்லினம்: ______________________

   இடையினம்: ______________________

5. வேற்றுமை உருபுகள் எத்தனை? நான்காம் வேற்றுமை, ஆறாம் வேற்றுமை உருபுகள் இடம் பெறச் சொல்லியங்கள் எழுதுக.

   ______________________

   ______________________

   ______________________

(புள்ளிகள் 15)

## 6) பந்தியைத் தமிழ்மொழியில் மொழிமாற்றுக.

Dans ce vaste monde, il y a beaucoup de pays, n'importe quel pays doit être considéré comme notre propre pays. Nous devons traiter, aimer comme si on vivait dans ce pays. Il est de notre responsabilité de protéger ce monde. Nous devrions pas détruire son environnement et ne pas détruire sa beauté. Il faut faire le nécessaire pour rendre le monde encore meilleure. Dans ce monde, il y a des millions de personnes. Chez ces personnes, il y a une diversité humaine dans le monde. Leur couleur de cheveux, de yeux, la taille sont tous différents. Ces personnes parlent beaucoup de langues. Quoique les langues soient différentes de plusieurs de façons, tout le monde est capable de vivre comme cela avec nous. Ce sont nos amis, nous ne devons pas être attristé, les détester ou s'opposer à eux. Nous nous entendrons avec tout le monde. Ce sont nos proches. Là où jamais nous sommes allés, nous devons le considérer comme notre propre pays. Nous devons considérer chacun en tant que nos proches et vivre solidairement avec eux.

I denne store verden finnes det mange steder. Hvilke sted det er, er det samme som hjemmestedet vårt. Vi skal godta det som vårt hjemmested. Det er vårt ansvar å vedlikeholde det. Vi skal ikke ødelegge ressursene på det stedet. Vi skal ikke ødelegge skjønnheten. Vi skal gjøre det som trengs for spesialitet på det stedet. I denne verden bor det mange millioner mennesker. Det finnes mange raser blant disse menneskene. Det er forskjell på deres hudfarge, høyde, øyne, hår og lepper. Disse menneskene snakker mange forskjellige språk. Selv om de er fra forskjellige grupper kan de bo sammen med oss. De er våre gode venner. Vi skal ikke være sint på dem. Vi skal ikke hate dem. Vi skal ikke være fiender. Vi skal være snill (vennlig) mot alle. Alle er jo slektningene våre. Hvilke sted vi skal til, skal vi godta det som vårt hjemmested. Vi skal godta alle de andre som våre slektninger og leve lykkelig.

I denne spredte verden, er der mange byer. Det kan være hvilken som helst by, der ligner vores by. Vi skal betragte dette steder som vort. Det er vort ansvar at bevare den. Denne skønne natur skal ikke destrueres. Skønheden må ikke ødelægges. Der skal gøres det nødvendige til byens bedste. Der bor mange milliarder mennesker i denne verden. Disse mennesker tilhører mange etniske grupper. Der er forskel på deres hudfarve, højde, øjne, hår, læber. Disse mennesker taler forskellige sprog. Selvom disse mennesker er forskellige, kan de begå sig sammen med os. De er vores kære venner. Vi skal ikke være vrede på dem, og hader dem. Vi skal ikke være uvenner. Vi skal omgås alle mennesker. Alle sammen er vores familie. Vi skal over alt til hvilken som helst by og gøre den til vores by. Og gøre alle folkeslag som vores familie og leve lykkeligt.

In questo grande mondo ci sono molte nazioni. Ogni paese è come il nostro. Dobbiamo considerarlo il paese in cui viviamo. E' nostra responsabilità prenderci cura di esso. Non dovremmo distruggere il suo ambiente e neppure la sua bellezza. Dovremmo fare ciò che è necessario per renderlo grande. A questo mondo ci sono molti milioni di persone. Tra queste persone ci sono molte razze. Sono tutte diverse per colore, altezza, occhi, capello e labbra. Queste persone parlano molte lingue. Sebbene siano diverse sotto molti aspetti, sono in grado di convivere con noi. Sono nostri amici. Non dobbiamo essere infastiditi dalla loro presenza, odiarli od opporci a loro. Ed andremo d'accordo con tutti. Siamo tutti parenti. Ovunque si vada, dobbiamo trattare quel paese come il nostro paese. Dobbiamo considerare tutti come nostri parenti e vivere felici

In zo'n grote wereld hebben we veel verschillende landen. Welke land dan ook, moeten we zien als onze eigen land. En die moeten we ook zien als onze woonplaats. Als inwoner moet we het goed onderhouden, dat is onze taak. We moeten geen onrust veroorzaken en de voorzieningen verstoren. We moeten juist voor zorgen dat die plaats beter ontwikkeld wordt.Over de hele wereld bevind zich miljarden mensen. Onder deze mensen hebben we verschillende soorten volken. Onder die volken zijn er veel verschillen in kleur, lengte, ogen, haar, lippen enzovoort. Onder deze volken spreken mensen verschillende talen. Ook al zijn er onderling verschillen in die volken, ze kunnen wel met elkaar samenleven. Zij zijn onze goede vrienden. Wij moeten ze niet negeren, niet haten en geen ruzie zoeken. We moeten met iedereen kunnen samenleven. Iedereen is een familie van ons. Waar wij ook zijn, we moeten die land als eigen land zien. We moeten uitgaan dat alle mensen onze familie zijn en er liefdevol omgaan.

In this big world, there are many countries. Any country is like our own country. We must treat it like the country we live in. It is our responsibility to look after it. We should not destroy its environment and not destroy its beauty. We should do what is necessary to make it great. In this world there are many millions of people. Within these people, there are many races. Their in colour, height, eyes, hair and lips are all different. These people speak many languages. Even though they are different in many ways, they are able to live together with us. They are our friends. We must not get annoyed (angry), hate (dislike) or oppose them with them. We will get along with everybody. All are our relatives. Where ever we go, we must treat that country like our own country. We must consider every as our relative and live happily.

I den här stora världen finns det flera byar. Vilken by det än är, känns det som om den vore vår. Vi måste betrakta den som vår. Att ta hand om den, är vårt ansvar. Vi får inte föstöra dens resurser. Vi får inte förstöra dess skönhet. Vi måste göra allt för att underhålla den. I den här världen fnns det flera miljarder människor. Inom dessa människor finns det flera olika nationaliteter. Deras färg, hår, ögon, längd, läppar skiljs åt. Dessa människor talar flera olika språk. Fastän de är olika, kan de leva tillsammans med oss. Dessa är våra vänner. Vi får inte bli arga på dom. Vi får inte hata dom, bli fiender med dom. Vi måste umgås med alla. Alla är vår släkt. Vilken by vi än går till, måste vi omfamna den som vår och leva där. Vi måste behandla alla som våra släktingar och vara glada och leva så.

(புள்ளிகள் 05)

7) **கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- **தமிழின் காவலர் தனிநாயகம் அடிகளார்**
- **போர்த்துக்கேயர் இலங்கையில் காலூன்றிய வரலாறு**
- **தொலைத் தொடர்பு ஊடக வளர்ச்சியும் அவை ஏற்படுத்தும் தாக்கங்களும்.**

  **(நன்மைகள், தீமைகள்)**

(புள்ளிகள் 20)